தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்டாட்சியர் அலுவலகம், அம்பாசமுத்திரம் வட்டம்

திருநெல்வேலி மாவட்டம்

அறிவிக்கை எண். 01 /2025 (ந.க.அ3/2148/2025) நாள்: 17.07.2025.

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், அம்பாசமுத்திரம் வட்டத்தில், காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்: | 17.07.2025 முதல் |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: | 16.08.2025 |
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100-35,100/- |
| வட்டத்தின் பெயர்: | அம்பாசமுத்திரம் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 3 |
| நிரப்பப்படவுள்ள கிராமத்தின் பெயர் விவரம் | 1. ஏகாம்பரபுரம்<br>2. சிவந்திபுரம்<br>3. ஆலடியூர் பகுதி 1 |

## இனசுழற்சி

| வ.எண். | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | காலியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 1 | ஏகாம்பரபுரம் | 1 | 51 – General Turn Priority (General)<br><br>51. பொதுப்பிரிவினர் – முன்னுரிமை பெற்றவர்கள் – (பொது) |
| 2 | சிவந்திபுரம் | 1 | 52 – SC – Non Priority ( women)<br><br>52. பட்டியலினத்தவர் முன்னுரிமை பெறாதவர்கள் (பெண்கள்) |
| 3 | ஆலடியூர் பகுதி-1 | 1 | 53 – MBC & DNC- Priority (General)<br><br>53. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமை பெற்றவர்கள்(பொது) |

| தகுதிகள் | | |
|---|---|---|
| கல்வித்தகுதி | 1. தமிழ்நாடு அரசு தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும் (குறிப்பு (SSLC Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.<br>2. மேலும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | |
| இதர தகுதிகள் : | 1. விண்ணப்பதாரர் அம்பாசமுத்திரம் வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும், முந்தைய குற்ற பின்னணி குறித்தும், நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடையவேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் | |
| வயது வரம்பு : | குறைந்த பட்ச வயது : | 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்) அறிவிக்கை நாள் அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்) |
| | அதிகபட்ச வயது : | 32* வயது (பொது பிரிவினர்)<br>37* வயது –பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்)/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) /பழங்குடியினர் |
| | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும் |
| | முன்னாள் இராணுவத்தினருக்கு | 48 வயது – பொது பிரிவினர்<br>53 வயது – பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்)<br><br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) /பழங்குடியினர்<br><br>(*அரசாணை (நிலை)எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை நாள்: 13.09.2021.–ன் படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ) |

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருநெல்வேலி மாவட்டத்தின் அதிகாரபூர்வமான இணையதளமான https://tirunelveli.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். |
| அலுவலக முகவரி | வட்டாட்சியர் அலுவலகம்,<br>அம்பாசமுத்திரம்–627401. |

S. Vee— 16.07.25

வருவாய் வட்டாட்சியர்

அம்பாசமுத்திரம்

16/7/2025

SUB COLLECTOR
CHERANMAHADEVI.

16/7/2025